## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 107/2010**

திரு.சின்னசாமி (D.W –1) **02.02.2026**

19 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. முதல் விசாரணை வாக்குமூலம் விவரங்கள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நான் தான் சொன்னேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஆங்கிலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தீர்ப்பு விவரங்களை கேட்டு தெரிந்து தான் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி. தாவா முதல் வாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் வெகு நாட்களாக தெரியும். அவர் என்னுடைய பங்காளி உறவு ஆக வேண்டும். முதல்வாதி ராமசாமியின் தகப்பனாருக்கு எவ்வளவு சொத்துக்கள் பாத்தியப்பட்டிருந்தது என்றால் தெரியாது. அவர் சொத்துக்களை நாங்கள் கிரயம் பெற்றுள்ளோம்.

2. கொண்டா கவுண்டருக்கு சொத்துக்கள் எப்படி, எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியம் என்பது நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. சொத்துக்களை கிரையம் பெற்றோம். கொண்டா கவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் ஐந்து மகன்கள். அவர்களுக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டதால் தாவா முதல்வாதி இராமசாமி சொத்துக்களை பொறுத்து கோயம்புத்தூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். அந்த வழக்கில் நான் ஏழாம் பிரதிவாதியாக காண்பிக்கப்பட்டுள்ளேன் என்றால் சரி. என்னுடைய சகோதரர் வழக்கை நடத்தினார். கோயம்புத்தூர் சார்பு நீதிமன்றத்தில் ராமசாமி தாக்கல் செய்த வழக்கில் இந்த வழக்கு சொத்தில் கொண்டா கவுண்டருக்கு பாத்தியப்பட்ட மற்ற சொத்துக்களும் சேர்த்து பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது.

3. பாகப்பிரிவினை வழக்கில் சார்பு நீதிமன்றத்தில் என்ன தீர்ப்பு ஏற்பட்டது. அதை எதிர்த்து தாக்கல் செய்த மேல் முறையிட்டு நீதிமன்றத்தில் என்ன தீர்ப்பு ஏற்பட்டது என்ற விவரங்கள் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய சகோதரர் தங்கமுத்துக்கு தான் தெரியும். என்னுடைய சகோதரர் தங்கமுத்துவிடம் இருந்து மேலே சொன்ன வழக்கு விவரங்களை பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அவர் சொல்லவில்லை. எப்போது அதைப்பற்றி தெரிந்து கொண்டேன் என்றால் முழுமையாக தெரியாது படித்து பார்த்து சொன்னால்தான் எனக்கு தெரியும். முதல் விசாரணை வாக்குமூலம் பத்தி 10ல் மேல்முறையீட்டு எண் 297/1972 தீர்ப்புரையின் ஏழாவது பக்கம் நாங்கள் நல்லெண்ண கிரையதாரராக சொத்துக்களை கிரையம் பெறவில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

4. தாவா சொத்தை கிரயம் பெறுவதற்கு முன்பு அந்த சொத்திற்கு உரிய அசல் உரிமையை பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். எந்த ஆவணத்தை பார்த்தீர்கள் என்றால் கொண்டா கவுண்டர் யாரிடம் கிரயம் பெற்றாரோ அந்த ஆவணத்தையும் பார்த்தோம். எந்த வருடம் சொத்துக்களை கிரயம் பெற்றோம் என்றால் 1969ல் கிரயம் பெற்றோம். பி.வா.சா.ஆ– 3 கிரைய ஆவணத்தில் தாவா சொத்து மற்றும் மற்ற சொத்துக்கள் கொண்டா கவுண்டருக்கும் அவருடைய மகன்களுக்கும் சேர்த்து கிரையம் ஏற்பட்டுள்ளது என்றால் தவறு. கொண்டா கவுண்டர் மட்டும்தான் சொத்துக்களை கிரயம் பெற்றார். பி.வா.சா.ஆ– 3 ன் படி தாவா சொத்துக்கள் மற்றும் கொண்டா கவுண்டரின் சொத்துக்களில் ராமசாமி கவுண்டருக்கு ஆறில் ஒரு பாகம் உள்ளது என்றால் சரியல்ல.

5. மேல்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்புக்குப் பிறகு சொத்துக்களை பாகம் பிரித்து இறுதி நிலை தீர்ப்பானை ஏற்படுத்துவதற்காக ராமசாமி சார்பு நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த மனுவில் நான் நீதிமன்றத்தில் ஆஜராகி நான் கிரயம் பெற்ற சொத்துக்களை பொறுத்து என்னுடைய பாகமாக ஒதுக்கும்படி கட்சி செய்து நீதிமன்ற கட்டணம் செலுத்தினேனா என்றால்

அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை. இறுதி நிலை தீர்ப்பாணையின்படி முதல்வாதி ராமச்சாமிக்கு சர்வே எண் 137 மற்றும் தாவா சொத்து அவருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் 137 பூமியில் உள்ள சொத்து மட்டும் தான் அவருக்கு ஒதுக்கப்பட்டது தாவா சொத்து அதில் வரவில்லை.

6. இறுதிநிலை தீர்ப்பாணைக்குப் பிறகு பாகதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை கொண்டா கவுண்டர் மற்ற வாரிசுதாரர்கள் மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்தார்கள் என்றால் எனக்குத் தெரியாது. முதல் விசாரணை வாக்குமூலத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவண விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரி. பி.வா.சா.ஆ– 5 முதல்வாதி இராமசாமி சுவாதினம் எடுத்த சொத்துக்களை விவரங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். மாவட்ட நீதிமன்ற மேல் முறையீட்டு தீர்ப்பின் படி இறுதி நிலை தீர்ப்பாணையில் ஆஜரான பிறகு கிரையம் மூலம் பெற்ற சொத்துக்கள் எங்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை.

7. தாவா சொத்தில் 0.41 சென்ட் நிலத்தை பொறுத்து கிரையம் பெறும்போது கொண்ட கவுண்டர் மட்டும்தான் கிரயம் செய்து கொடுத்தார் என்றால் தவறு. கொண்டா கவுண்டரும் அவருடைய சகோதரர்களும் கையொப்பம் செய்து கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள். பி.வா.சா.ஆ– 5 படித்து காண்பித்தபோது கொண்டா கவுண்டர் மட்டும்தான் கிரயம் செய்து கொடுத்ததாக உள்ளது என்றால் ஆமாம் என்று சாட்சி கூறுகிறார். தாவாவில் வாதி தாக்கல் செய்த ஆவணங்களை எதிர் வழக்குரை தாக்கல் செய்வதற்கு முன்பு கேட்டு படித்து தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ– 6 ல் பக்கம் 6 ல் கொண்டா கவுண்டருக்கு க.ச.எண் 139 என்ன பாகம் வருமோ அந்த பாகத்தை எங்களுக்கு ஒதுக்கும்படி உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8. மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி க.ச.எண் 139 ல் என்ன விகிதாராப்படி பாகம் உள்ளதோ அந்த பாகம் மட்டும் தான் எங்களுக்கு கிடைக்கும் என்றால் சரியல்ல. இறுதி நிலை தீர்ப்பாணை மனுவில் முடிவுகளை தெரிந்து

கொண்டீர்களா என்றால் தெரிந்து தெரிந்து கொள்ளவில்லை. இறுதிநிலை தீர்ப்பாணையில் பாகப்பிரிவினை சட்டத்தின் படி தரப்பினர்கள் நடவடிக்கை எடுத்து இந்த தாவா சொத்தை பிரித்துக் கொள்ளும்படி உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. இறுதி நிலை தீர்பபாணை உத்தரவுக்கு பிறகு வேறு என்ன உத்தரவுகள் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரி.

மேலும் குறுக்கு விசாரணை செய்ய அவகாசம் கோரியதால் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d. கே.ஆர்.கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.